சோழ தேசத்துப் பூர்வீக மன்னர்களின் பெயர் அட்டவணை

பதிப்பாளர்
சே. திருநாவுக்கரசு

நெறியாளர்
முனைவர் **ய.மணிகண்டன்**
உதவிப் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005.
2011

சோழ தேசத்துப் பூர்வீக மன்னர்களின் பெயர் அட்டவணை

"சுவடியியலும் பதிப்பியலும்"
பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்

சே. திருநாவுக்கரசு

நெறியாளர்

முனைவர் **ய.மணிகண்டன்**

உதவிப் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
2011

“சுவடியியலும் பதிப்பியலும்” பட்டயச் சான்றிதழுக்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெறும் பதிப்பேடு.

தேர்வு எண் : 43011069

முனைவர் ய. மணிகண்டன்
உதவிப் பேராசிரியர்
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

நெறியாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் **"சுவடியியலும் பதிப்பியலும்"** பட்டயச் சான்றிதழுக்காக **"சோழ தேசத்துப் பூர்விக மன்னர்களின் பெயர் அட்டவணை"** எனும் தலைப்பிலான சுவடியை **சே. திருநாவுக்கரசு** அவர்களால் எனது மேற்பார்வையில் கீழ் பதிப்பித்தார் என்றும், இந்த பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியால் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

(ய. மணிகண்டன்)

நாள் : – – 2011

இடம் : சென்னை – 5.

சே. திருநாவுக்கரசு
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

பதிப்பாளர் உறுதிமொழி

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் **"சுவடியியலும் பதிப்பியலும்"** எனும் பட்டயச் சான்றிதழுக்காக **"சோழ தேசத்துப் பூர்விக மன்னர்களின் பெயர் அட்டவணை"** எனும் தலைப்பிலான சுவடியை என்னுடைய சொந்த முயற்சியில் பதிப்பிக்கப்பட்டது என்று சான்றளிக்கிறேன்.

பதிப்பாளர்,

(சே. திருநாவுக்கரசு)

நாள் : – – 2011.
இடம் : **சென்னை–5.**

என் பாசமிகு
பெற்றோர்க்கு. . .

உள்ளடக்கம்

	பக்கம்
பதிப்புரை	13
நன்றியுரை	15
சோழதேசத்துப் பூர்வீக மன்னர்களின் பெயர் அட்டவணை	17

பதிப்புரை

சோழ தேசத்துப் பூர்வீக மன்னர்களின் பெயர் அட்டவணை கூறும் செய்திகள் என்னவென்றால் மேசர்கர்னல் மெகன்ஸ் வேண்டுதலுக்கு இணங்க, சோழ ராஜாக்களின் வரலாறு எழுதப்பட்டுள்ளது. சோழ ராசாக்களுக்குப் பிறகு ஆண்ட மன்னர்கள் பற்றியும் எழுதியுள்ளார்.

நன்றியுரை

"சுவடியியலும் பதிப்பியலும்" என்கிற பட்டயப் படிப்பில் சேருவதற்கு வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைக்கு முதற்கண் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பட்டயப் படிப்பில் செம்மையான முறையில் பயிற்சியளித்த **பேராசிரியர் வீ. அரசு** மற்றும் **முதுநிலை விரிவுரையாளர்கள் ய. மணிகண்டன், முனைவர் சி. இளங்கோ, முனைவர் லதா** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

எனக்கு தாய் தந்தையாய் இருக்கும் தமிழருவி மணியன் அப்பா அவர்களுக்கும். சுவடிப் பட்டயப் படிப்பில் சேருவதற்கு ஊக்கமளித்த தோழிகள் ம. பிரபாவதி, கு. தேம்பாவணி, பொ. சங்கீதா. இரா. இராஜகுமாரி. தீபா தேவிப்பிரியா தோழர்கள், நா.இளையராஜா, அ. மகேஷ், சு.நரேந்திரகுமார் கு. பரந்தாமன் மற்றும் உரிய நேரத்தில் சிறந்த முறையில் வடிவமைத்துத் தந்த டுடே கிராபிக்ஸ் நிறுவனத்தார் பாபு அவர்களுக்கும் தட்டச்சு செய்து தந்த ஜெயா அவர்களுக்கும் மிக்க நன்றி.

சோழ தேசத்துப் பூர்வீக மன்னர்களின் பெயர் அட்டவணை

சோழ தேசத்தில் பூர்வீகமாக இருந்த சில இராசாக்களின் பெயர் அட்டவணை.

கனம் பொருந்திய மேசர்கர்னல் மெக்ன்ஸ் துரை அவர்கள் எழுதி அனுப்பிய கடிதத்தில் கேட்டுக் கொண்ட மிக முக்கிய கேள்வியானது என்னவென்றால், சோழ ராஜ்ஜியத்தில் சோழ ராஜாக்கள் இருந்தனர் என்றும், அம்மன்னர்களின் வரலாறு குறித்தும், அம்மன்னர்களின் அரசாட்சி ஏன் அடியோடு அழிந்து போனது என்றும், சோழ மன்னர்களுக்குப் பிறகு அரசாண்ட மன்னர்களைப் பற்றியும் விசாரித்து எழுத வேண்டும் என்பது மேசர் கர்னல் மெகன்ஸின் வேண்டுதலாகும்.

வேண்டுதலுக்குட்பட்டு "**வேத காமசிரோமணி**" தொகுத்தளித்த வரலாற்றைக் காண்போம்.

இச்சோழ தேசத்திலிருக்கின்ற பெரியோர்களையும், பிராமணர்களையும், கல்வி, இசை ஆகியவற்றில் சிறந்தவர்களையும் விசாரித்ததில் முரண்பாடு தென்படுகிறது.

64 சோழ மன்னர்கள் இருந்தனர் என்றும், 24 சோழ மன்னர்கள் இருந்தனர் என்றும், 14 சோழ மன்னர்கள் இருந்தனர் என்று முரண்பட பேசியுள்ளனர். வேறொருவர் சோழ மன்னர்களை கணக்கிட முடியாது அதிக எண்ணிக்கையில் வாழ்ந்துள்ளனர் என்கின்றனர்.

பிறதி சுவர் மருத்துவம் என்னும் நூலில் 16 சோழ மன்னர்கள் மட்டும் இருந்துள்ளனர். அவர்கள் 1072 ஆண்டுகள் ஆண்டுள்ளனர் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

சோழ மருத்துவத்திலேயே சோழ ராசாக்களின் நடப்பு இப்புத்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறது. அதில் பொய்யும் கலந்திருக்கும் என்று அப்புத்தகச் செய்திகளைக் கண்டுக்கொள்ளாமல் விட்டு விட்டனர்.

சோழ தேசத்து தலப்புராணங்களையும். எல்லா பிராமண குருக்கள் தங்கள் தேவைகளுக்காக, ஸ்தல புராணங்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு பொய்யான கதைகளினாலே விவரித்து சரித்திரத்தினுடைய பசுமையை அழித்துவிட்டார்கள்.

சோழ ராசாக்கள் புதுக்கோயில்களைக் கட்டியிருந் தாலும், அந்தணர்களால் தோற்றுவிக் கப்பட்டவை அல்ல. சோழ மன்னர்கள் சீரண உத்தாரணம் பண்ணிக் கட்டி வைத்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தணர்களுக்கு வேண்டிய தளங்களின் மகத்துவத்தைக் காட்டவும், சோழ ராசாக்கள் பிராமணபீசந்துக்குத் தமிழச்சி வயற்றிலே பிறந்தவர்கள் என்று சொல்லியிருக்கிறது.

சோழ மன்னர்கள் பிராமண - தமிழச்சி இருவருக்கும் பிறந்தவர்கள், என்று பொருள்படும். இது அருவருக்கத்தக்கப் பொய், நடைமுறை வாழ்க்கையில் பார்க்கும் பொழுது ஒரு பெண்ணுக்கு ஒரு கருப்பை மட்டும் உள்ளது.பறைச்சியிடத்தில் பிள்ளை பிறந்தாலும், அது தன் தாயைப் போல பிறசுபாவத்தைக் கொண்டிருக்காமல். தன் தகப்பனுடைய சுவாவத்தைக்

கொண்டிருக்கும். அப்படியே முந்தின. சோழன் முற்றிலும் தமிழச்சி வயிற்றிலே பிராமணனுக்குப் பிறந்திருந்தால் அந்தப் பிராமணப் பேச்சும் வெளிப்படும். தமிழ்ப் பேச்சுக்கும் பிராமணப் பேச்சுக்கும் வேறுபாடு உண்டு. இது தமிழ் ராஜ்ஜி மானபடியினாலே இதில் தமிழ் பிரதானம்.

தெலுங்கு, கிரந்தம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் பிராதானமல்ல. இந்த ராஜ்ஜியத்தில் இம்மொழிகள் கொச்சையாய்ப் பேசப்படுகின்றன. தமிழ் மொழி ஒன்றே சாதுரியமாகப் பேசப்படுகின்றது. ஆகவே இந்த ராஜ்ஜியம் தமிழ் ராஜ்ஜியம் என்பதற்கு மறுப்பதற்கில்லை. இப்படியிருக்கின்றபடியினாலே இந்த தமிழ் ராஜ்ஜியத்தை முதல் முதலில் ராசாக்கள் தமிழர்களாய் இருப்பார்களே அல்லாமல் பிராமணராய் இருக்க வேண்டிய முகாந்திரமில்லை. பிராமணர்கள், துக்கர்கள், மராட்டியர்கள் மெல்ல இந்த ராஜ்ஜியத்திலே வந்து குடியேறியவர்கள். இந்த சீமையின் நன்மையைக் கண்ட பிறகு இதை விட்டுப் போக மனதுவராமல் பல சாதியினர் வந்து குடியேறினர். இதனால் தமிழ் சிறுமைப்படுத்தி பிற சாதியினர் ஊன்றி, பலம் கொண்டார்கள்.

இவ்விதமாக பிராமணர்கள் வடதேசத்திலிருந்து நான் நினைக்கிற படியும், வெளியிடவர்களிடத்திலேயிருந்து கேள்விப்பட்ட படியும், எகிப்து தேசத்திலிருந்து அக்னியான கோவில்களுடைய பூசாரிகள் இவர்கள் ஒன்றுக்கொன்று விரோதத்தினாலே சண்டைப் போட்டுக் கொண்டு பாதிப்பேர் மட்டும் இந்த சோழ ராஜ்ஜியத்துக்கு புறப்பட்டு வந்து இவ்விடத்திலே இருந்த சேரன், சோழன், பாண்டியன் என்கிற ராசாக்களைக் கவர்ந்ததுள்ளது.

நல்லது பண்ணிக் கொண்டு, அந்தணர்கள் தங்கள் உபதேசங்களை இவர்களுக்கும் சொல்லிக் கொடுத்து இவர்களுக்கு இசைந்தார்ப் போலவே சில சுவாமிகளையும், கோயில்களையும் உண்டுபண்ணி நினமும் பூஜை செய்வதினாலே இவர்களுக்கு மோட்சம் உண்டாகுமென நயம்பட சொல்லி, பொய்யான சாத்திரங்களையும், நிமித்தங்களையும் சொல்லி ஒவ்வொருவரும் இந்த நட்சத்திரத்திலே பிறக்க வேண்டும் என்றும், **அசுவின் முதல் ரேவதி வரை 27 நட்சத்திரங்களை** உண்டு பண்ணி அதுகளிலே பிறந்தால் இன்னின்ன பலன் உண்டாகும் என்றும் வரையறை செய்தனர். வருகின்ற வருஷத்திலே ஏற்படுகின்ற நன்மை தீமைகளை முன்னரே சொல்லிப் பொய்யான வார்த்தைகளைக் கொண்டுள்ளனர்.

பிறப்பிலே இன்னன்ன செயல்களைச் செய்தால் பெரிய ராசாவாய் பெரிய குலத்திலே பிறக்கலாம் என்கிறபடியால் எல்லா சாதியினரும் இவர்களை குருவென்று அங்கிகாரம் பண்ணி வைத்துக் கொண்டார்கள்.

இவர்கள் முன்னாலே வாழ்ந்த ராஜ்ஜியத் திலிருக்கின்றபோது அன்னியப்பதார்த்த மாங்கிஷ்யகளைப் சாப்பிடுபவர்களாய் இருந்தாலும் வரவர அவைகளை விட்டு போட்டு தாங்கள் தந்திரமான புத்தியினாலும் இந்த ஜனங்களை ஏய்க்கிறதற்கு எது நன்மையாக காணுவதோ, அதை தெரிந்து - எடுத்துக் கொண்டு, அதை கையாடிக் கொண்டு ஆசாரத்தையும் வீணான விரதங்களையும் காட்டினார்கள். அதனாலே எல்லா சாதியரும்

இவர்களுடைய ஆசாரங்களையும் சுத்தங்களையும், குளித்து முழுகி ஸ்தானம் பண்ணுகிறவர்களையும் என்னேரம் வேதம் ஒதுகிறவர்களையும் மற்றும் இவர்களுடைய வழிபாடுகளையும் கண்டபோது எல்லோரும் இவர்களை வணங்கி கீழ்படிந்து இவர்கள் சொன்னபடிக் கேட்டு நடந்து கொண்டவர்களை இவர்களுடைய வங்கிஷத்திலே அக்காலத்திலேயே முக்கியமானவர்களாய் இருந்தவர்கள், அப்பர், சுந்தரர், சம்மந்தர் மாணிக்கவாசகர் என்கிற நாலுபிரதான மனுஷர்களாக இருந்தவர்கள்.

இவர்கள் தமிழ்ச் சாத்திரங்களை மகாதிட்டமாய் படித்து தமிழ்ச் சாதியாருக்கு வேதங்களை உண்டு பண்ணினார்கள். அக்காலத்திலே மதுரையிலே பாண்டிய ராசாவுக்கு கீழாக சமண சமயத்தைச் சார்ந்த சமணர்கள் மட்டும் இருந்தார்கள். அந்த சமணர்களுக்கு இந்த பிராமணர் சொல்லுகிற உபதேசமும், இவர்கள் நடவடிக்கையும் ஒத்துவராமல் ஒன்றுக்கொன்று விரோதங்கள் நடந்தது. இந்த பிராமண குருக்களுக்குத் தலைமையாய் இருந்த சம்மந்தர் சோழ ராஜாவை எப்படி தங்கள்கைக்குள்ளாக்கினார்களோ, அப்படியே கூன் பாண்டியனையும் பழித்துவைத்து தங்களுடைய மற்ற தந்திரங்களினாலே பல புதுமைகளையும், சூனியங்களையும் காட்டி தேசக் குடியாய் இருந்த சமணர்களை முழுவதும் அழித்துப் போடபட்டார்கள்.

அதெப்படியெனில், அறுபத்துநாலு திருவிளை யாடல்களிலே இதைத் தொட்டு சொல்லியிருக்கிறது. என்னவென்றால் சம்மந்த மூர்த்தியும் அவருடைய

சிஷியர்களும் வந்து தங்கியிருந்த மடத்திலே சமணர்கள் விரோதத்தினாலே நெருப்பு வைத்து அந்த நெருப்பை சம்மந்தமூர்த்தி மந்திரத்தினாலே அவித்து பாண்டிய ராசாவின் மேலையே ஏவினாராம். அப்போது அந்த அக்கினி கொடிய சுரமாய் பாண்டியனை எரிக்கிறபோது சமணர்களை அழைப்பித்து அதைத் தீர்க்கச் சொன்னார். அப்போது பிராமண குரு சம்மந்த மூர்த்தியை அழைப்பித்தாராம். இவர் திருநீறுபோட்டு பாதிப்பக்கத்துச் சுரத்தை சொந்தமாக்கி, மறுபாதி பக்கத்திலே, இந்த பக்கத்து அக்கினியை கூடப்போக பண்ணினார். அப்போது பாண்டியனுக்கு ஒரு பக்கம் சுகமாகவும், மறுபக்கமோ முன்னினும் கொடியதாகவும் பத்தி எறிந்தது. அப்போ சம்மந்தர் பாண்டியனோட இந்த பாதி பக்கத்தையும் சமணர்களை சொந்தமாக்கச் சொல்லும், என்றும் நாங்கள் ஒரு பக்கத்தை சொந்தமாக்கினாலே அப்படியவர்களும் செய்யட்டும். அவர்கள் அந்தப்படியே சொந்தமாக்கினால் எங்களைக் கழுவிலே போடுகிறது. இல்லை எனில் அவர்களைக் கழுவிலே போடவேண்டும் என வாக்குவாதம் உண்டானது. இதைப்பற்றி சமணர்கள் என்ன பிரையாசைப் பட்டாலும் சொந்தமாக்க அவர்களாலேயே கூடாமல் போய்விட்டது. ஏனென்றால் இவர்களுடைய பில்லி சூனியமோ கொடுமையாக இருந்தது. அப்புறம் சம்மந்தர் விபூதியைப் போட்டு முற்றிலும் சொஸ்த்தமாக்கினாராம். அப்போ பாண்டியனுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டானதாகக் கொண்டு, தான் துதித்துக் கொண்டிருந்த சமணர் வேதத்தை விட்டுவிட்டது மில்லாமல் சமணர்களை கழுவேற்றினார். மீதி சமணர்கள் தெரிகெட்டு சீர்மைதோறும் சிதறிப்போனார்கள்.

இவர்களைத் தொட்டு உலகச் சரித்திரத்தில் 197 வது ஏட்டிலே எழுதப்பட்டது என்னவென்றால், ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன்னே கூன் பாண்டியன் பவுத்தரைச் சம்காரம் பண்ணி எழுச்சியவர்கள் கங்கை நதிக் கரையில் இந்நாள் வரையும் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறது. இங்கே சொல்லப்படுகிற பவுத்த சமணர் தானே பின்னையும் 5.7-ம் ஏட்டியிலே சொல்லியிருக்கிறது என்னவென்றால், பாண்டிய வஸ்கிஷத்திலே புரூரவன் முதலாய் வழுதிகண்டன் முன்னூற்று அறுபத்தி இரண்டு பாண்டிய ராஜ்ஜியம் அமைந்துள்ளது. 357 பாண்டியனுக்குப் பிறகு பவுத்தர்களை கூன் பாண்டியன் அழித்தான். அவனுக்குப் பிற்பாடு இன்னும் மூன்று பாண்டிய மன்னர்கள் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது.

இப்படியாக பிராமணருக்கு எதிரியாய் இருந்த சமணர்கள் முற்றிலும் அழிக்கப்பட்டு போனபிறகு பிராமணருக்கு எதிரிகள் இல்லாமையால் இவர்களுடைய வேதம் அதிக அதிகமாய் பரவுவதற்கு எளிய வழி உண்டாயிற்று.

ஏனென்றால் இவர்களே போதகத்துக்கு எதிர்ச் சொல்லுகிறவர்கள் ஒருத்தருமில்லாமல் போனபோது தங்கள் மனதில் உள்ள எல்லாப் பொய்களையும் கட்டினார்கள். இவர்கள் சந்திர கிரகணம், சூரிய கிரகணம், வருஷ தேதி, மாதம், மற்றதுகளை கணிக்கிறது. இது பஞ்சாகங்களை உண்டு பண்ணுகிறது. மற்ற சோதிட சாஸ்திரமெல்லாம் இந்த ராஜ்ஜியத்திலே இவர்கள் கற்றுக் கொண்டு வந்த கல்வி தானே.

பிராமணர் எகிப்து தேசத்தியிருந்து வந்தவர்கள் என்கிற ரூபாகாரம் பண்ணுகிற இரண்டு திவிட்டாந்திரம்

1. உலக சரித்திரம் - ரு. 5

2. சோழ மருத்துவம் ஆகிய ஏட்டிலே எழுதப்பட்டுள்ளபடி உலகம் உண்டாகி 2364 எகிப்து அரசு புரிந்த சிபி தேவர்கள் கட்டளையிட்டான். அதனால் எகிப்தாரின் வேதப்பிறைகள்யாவும் தோன்றியது (முளைத்தது) என்றெழுதியிருக்கிறது.

ஆனபடியினாலே, சந்திர சூரியனை வணங்குகிற ஆராதனை எகிப்து தேசத்தாருக்கு சபியர்களால் கட்டளையிடப்பட்டது. இப்பொழுது இந்த தேசத்தைச் சார்ந்தோரும் சந்திர சூரியனை வணங்குகிறார்கள். இந்த உபதேசம் எகிப்து பூசாரி ஆகியவர்கள் முன் சொன்ன பிராமணராலே சந்தேகம் இல்லாமல் வந்தது என்று நினைக்கக்கூடும்.

உலக சரித்திரம் 26 ஆம் ஆண்டில் எழுதப்பட்டவை என்னவென்றால் உலகம் உண்டாகி 3650 வருஷத்திலே முந்தைய கிரேக்கர்களான இஸகாந்தன் எனப்பட்ட மகாஅலெக்ஸ்கந்தர் பட்டத்துக்கு வைக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு கட்சி சிபாரிசு தாரிக்கோதோ மன்னனை வென்று 206 ஆண்டுகள் நிலைத்துநின்று பேராட்சி பாரதத்தைக்கட்டி கங்கை நதி மட்டும் எல்லாத்தையும் ஒரு குடையின் கீழ் ஆண்டு கொண்டிருந்தான் என எழுதியுள்ளன.

இந்த ராஜியத்தை கிரேக்க ராசாவாகிய அலெக்ஸ் கந்தர் 2100 ஆண்டுகளுக்கு முன்னரே வஸ்காந்தர் கங்கை நதியை மட்டும் கட்டியாண்டாள் அவர்களுடைய ஞானிகளாகிய (அல்லது) எகிப்து பூசாரிகளான பிராமணர்களும் அக்களத்தில் தானும் அவர்களோடு இவ்விடத்திற்கு வந்திருக்க வேண்டுமென்று நம்ப வேண்டியிருக்கின்றன.

ஆதலால் சோழராசாக்கள் பிராமணர்களே அல்லது பிராமணவிதத்தினாலே வந்தார்கள் என நினைக்கக் கூடாது. மலையாள ராஜியத்திலே புத்திசாலியான ஒரு பெண் முதன்முதல் பிராமணராலே உபதேசம் அப்படியே ராஜஸ்திரிகளும், பிராமணனை வயிற்றிலிருந்து அவனாலே உண்டான குழந்தைக்கு அவ்விடத்திலே பட்டம்கட்டுகிறது என்று கேள்விப்பட்டேன். ஏனென்றால், அந்த சாதி உயர் அறிவின சாதியானவர்கள் என்பதினாலே இப்படி நடக்கிறது. இவர்களை அனைவரும் உயசாதிகாரர்களை புண்ணியம் என நினைக்கின்றனர். பின்னாலே நான் மலையாள சாதியாருடைய திட்டமாய் எழுதியனுப்பிய நடமுறைகளை அறிந்து கொள்ள முடிகிறது. சோழ மண்டலம், தொண்டை மண்டலம், பாண்டிய மண்டலம் இந்த மூன்று சாதியாரை மலையாள தேசத்தாளும், உயர்சாதி தாழ்வாக எண்ணுகிறது. ஆனால் சோழ மருத்துவத்திலே சொல்லப்பட்டள்ள பதினாறு சோழர்கள் இல்லை என சொன்னபோது அவர்கள் எல்லாம் வாழ்ந்தார்கள், என்பதற்கு சந்தேகமில்லை. அந்த ராசர்களடைய அங்கிவு அட்டவணை முன்னது பின்னதாகச் சொல்லப்பட்டுள்ளன.

ஏனென்றால் மருத்துவத்திலே குலோத்துங்கச் சோழன் முதல் சோழன் என்றும் அதன்பிறகு மற்ற சோழர்கள் உண்டானார்கள் என்றும் கூறுகின்றனர். M d hš eh‹ b fhL¤j njr¤jh® **பூர்வீக சரித்திரம்** என்கிற புத்தகத்திலே குலோத்துங்கச் சோழன் கடைசியாக இருந்தான் எனவும் கூறுகின்றது. இதனைக் கம்பன் அலன்மகன் அம்பிகாபதி கதையினாலும் மற்ற வித்வாங்களின் விடுபாட்டுகளாலும் நம்ப வேண்டியுள்ளன. ஏனென்றால் குலோத்தங்கச் சோழனுக்கப் பிறகு ராசாக்கள் இல்லை. சோழவர்கம் முற்றும் போனது என கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் விரோதமாக சொல்வதையும் கூட இங்கே எழுதிக்காட்டுகிறேன். அதாவது குலோத்துங்கச் சோழன் இறுதியாக பத்திர சோழன் வரைக்கும் அவரவர் ஆண்ட வருடம் 1059 இது கலியுகம் 3349 க்கு மேல் துவக்கமாய் 451/2 வருடம் வரைக்கும் நடந்தது அதன் பிறகு சில நாள் ராசாக்கள் இல்லாத ராஜியமாக இருந்தன எனவும் தெரிகின்றன. காரணம் பத்திரசோழன் ராசாவுக்கு பிள்ளையில்லாக் காரணத்தினால் குலோத்துங்கச் சோழன் தொடங்கி, பதினாறு சோழன்கள் முந்ததனாலே எனவும், இவை இல்லாமல் விக்கிரமாதித்தன் ராசா சக்கரவர்தியாய் ஆண்ட பிறகு அவனின் குசவனான **சாலிய வாகனன்**வென்று அவன் பட்டத்தை ஆண்டு கொண்டான். இந்த சகனனைத் தொட்டு, உலக சரித்திரம் 54 வது ஏட்டிலே எழுதப்பட்டது என்னவென்றால், கிருஷ்து பிறந்த 78 ஆம் வருஷம் துவங்கி சகார்த்தம் தொகையேற்றப்பட வேண்டும்.

கோவிந்தசாமி என்ற ராசாவின் குமாரனாகிய சாலி வாகனன், சிறு வயதிலே தானே ராசாவாக மண்குதிரையேறி விளையாடுவான், பெரியவனானபிறகு, "விக்கிரமாதித்தன்" என்ற தன் சிரிய தகப்பனாரின் பட்டத்தை பிடுங்கி நம்முடைய இந்துஷ்தானியை எல்லாம் ஒரு குடையின் கீழ் ஆண்டுகொண்டிருந்தான். அவன் சக்தியிலே பிற காலம் பெண் கொண்டு இந்த சீமையை தன்னுடைய கோத்திரத்தின் கீழ் கொண்டுவந்துள்ளான்.

இதன்படி சகன் சக்கரவர்த்தியான போது அயோத்தி மாநகரத்தை சூழ்ந்த அக (81) தேசக்குடிகளுக்கு அந்த சாதி ராசாவே ஆண்டார். குடிகளின் தலைமைக்குடிகள் ராசாவுடனேயிருந்து பந்திபோசனம் பண்ணவும் இந்த ராசாவே மக்களுக்கு பந்துவாக இந்து எல்லோரையும் இரட்சித்துக்கொண்டு செய்கிற தரும காரியங்களுக்கு சகலமும் பரிந்து ஒத்தாசை செய்து கொண்டு குபுகளே ராசாவோட படையெடுத்து திக்குமுக்காய் இருந்து எதிரி ராசாக்களை அடக்கி சமாதானப்படுத்தி இருந்தார்கள் இப்படி சோழ தேசத்துக் குடிகளுக்கு எல்லாம் சூத்திரர் முதல் பிராமணர்கள் வரைக்கும் சோழியர் என்று கூறப்படும். இவ்வாறு கர்நாடக தேசத்திலும், தெலுங்கு தேசத்திலும் மராட்டிய தேசத்திலும், ஆரிய தேசத்திலும் இந்து தேசத்திலும், இன்னும் மற்ற தேசங்களும் வரம்பு தப்பாமல் நடத்தி வைத்த சக்கரவர்த்திபோய் விபரீத காரத்தினாலே கீழிது மேலாகவும் மேலீது கீழிதுமாக ஆயிற்று.

ஆனதினாலேயே சோழ தேசத்திலும் மற்ற தேங்களிலும் ஒன்றைப் பார்த்து ஒன்று தங்கள் கைபலத்தினாலும், மனப்பலத்தினாலும், அங்கே இருக்கின்ற அற்பச்சாதிகள் அந்தந்த இனத்தைச் சார்ந்த தொழிலாளிகளோடு சேர்ந்து படைகூடி படையாச்சி செய்தனர். பாளையத்துக்குப் பாளையத்துக்காரர்என்ற பெயரும் உண்டானது.

இவர்கள் சில நாள் வலோக்கரமாய் இந்த தேசத்தை M §fh§nf M © l h®fŸ ï j‹ ã wF **ஆனைக் கொந்திராயர்** ஆட்சியில் விதாயீணய வாங்கிலி சிரேஸ்ட்டராகப்பட்டவர் சுவாமியுடைய கிருபயாலே ஒரு மலைக்கோயிலை பூங்கர்ப்பத்திருக்கிற திரவியங்களைக் காட்டி அந்த திரவியத்தினால் பறைச் சேரியில் இருக்கிற (அல்லது) நாட்டிலிருக்கிற மக்களுக்கு பயிறிடுதலாகிய இருக்கின்ற சாதிகள் உட்பட்டு பறை 18 லேயும் காடு, மலை, தண்ணீர் இதில் சஞ்சரிக்கின்ற வாலை, சாதி, அதாவது வதைப்பண்ணுகிற சாதி அல்லது நுளச்சாதி 108 பேர் பட்டளர்களுக்கு ஆயுதம் கொடுத்து **புசாக்கராயன்** சக்ரவர்த்தி போல ராஜ்யம் ஆண்டார்கள் மேலாக சொன்ன பாளையக்காரர் படைக்கு பயந்து கிருஷ்ணராயர் ஆதவிலே ஆங்காங்கு கோட்டைகள் கட்டி படைவைத்து சம்பளங்களைக் கொடுத்து புசாங்கராயர் ஆண்டதைவிட அதிக ஆண்டுகள் ஆண்டார்.

இவ்விதமாக, கட்சியான பத்திரசோழன் அடுத்து 402 வருடங்களுக்குப் பின் புசாங்கராயன் இராட்சியங்கட்டி 390 ஆண்டுகள் ஆண்டான் என கூறுகிறார்கள் ஆயினும்

எத்தனைச் சோழர்கள் இருந்தார்கள் என்றும், அவர்கள் தலைமுறை ஒழுங்காக கூறப்படவில்லை.

பாண்டியன் தேசத்திலும் பண்டார்ச் சன்னதிகளிடத்தில் சுற்றித்திரிந்த பிறகு இராமநாத புரத்து சேது சக்கரவர்த்திகளையும், ஆராய்ந்து பார்த்தால் எல்லோருடைய வாக்கியத்திற்கும் ஒத்துப்பார்த்தால் ஒரு தேசத்தார் சொல்வதற்கும், மற்றொ தேசத்தார் சொல்வதற்கும் ஒன்றாக இருப்பதினால் அறிவின்கண் விசாரித்துப் பார்த்து சோழ ராசாக்களுடைய தலைமுறை அட்டவணை எழுதவேண்டுமெயொழிய நினைத்தபடி எழுத கூடாது.

இது தவிர, முக்காலத்திலேயே பிராமணர்களுள் மிகப் பெரிய சாஸ்திரிகள் இருந்தார்கள் அவர்களால் தானே புராணங்களும். சமையங்களும் உண்டானது. அவர்கள் பெயர் என்னவென்றால் கணக்குமாரர். தாருவாசர், நாரதர், கபிலர், பிரமாண்ட வருணர், காளி, வசிப்பர், சயங்கர் சாம்புசர், பாரசர், மாரீகன், போன்ற பதினெட்டுபேர்கள் வைத்த தர்மம் தரும் சாஸ்திர கதைகளையும் உண்டாக்கினர். அகத்தியர் உண்டாக்கின ஞானத்திலே 10 பாடல் துவங்கி 14 கலிமட்டும் சொல்கிறார்.

மேலாகச் சொன்னப்பட்டவர்களும், வேதவியாசருக்கும் பின்னான காலத்திலே அகத்தியர் இருந்தார்போல காணப்படவில்லை. இந்த அகத்தியர் தமிழை உருவாக்கினார். என்று அக்கியானிகள் கூறுகிறார்கள். அதை நான் நம்பவில்லை ஆனால் வைத்திய

சாஸ்திரங்களை உண்டாக்கினாரென்றாலும் அவர் தமிழிலே அவ்வளவு திறமையானவர் அல்ல என்று அவருடைய சாஸ்திரங்களிலேயே வெளிப்படையாய் தெரிகிறது.

ஏனென்றால் அவைகள் எல்லாம் மெத்த வெள்ளையும் ஒரு போங்கான் பாடலுமாயிருக்குது. இவரும் இவற்றைச் சேர்ந்த பதினெட்டு சித்தாதிகளுஞ் சூத்திரமாய்த் தானே இருந்தார்கள். இந்த சித்தாதிகள் வாக்கியமெல்லாம் மெத்த வெள்ளையாய் இருக்கும். அல்லாமல் சற்றாகிலுங் கருகலாயிருக்காது. குலோத்துங் சோழன் நாளிலே இந்த கம்பனுடைய பாடலாசிரியர் இராமாயணம் அம்மாத்திரம் கட்டு முகங்களை அகத்தியருடைய பாடல்கள் இருக்காமல் ஆனபடியினாலே அகஸ்த்தியர் தமிழை உண்டு பண்ணினார் என்று பலிச்சேதம் நினைக்கக் கூடாது. ஆனால் தமிழ் பாஷைகளையும், இலக்கண சாஸ்திரங்களையும் உண்டு பண்ணினார். என எண்ணுவது தவறு. அகஸ்தியர் ஒரு வைத்திய சாஸ்திரி அதற்கு ஆதாரமாக அவர், நாக மாமுனி கிரந்த அட்சரங்களை உண்டு பண்ணினார் என்று பிராமணர்கள் சொல்கிறார்கள். அப்படியிருந்தாலும் இருக்கும். ஆனால் அகத்தியர் தமிழ் அச்சாரங்களை உண்டு பண்ணியதை பிராமண குருக்கள் ஏற்று கற்றுக் கொண்டு உபதேசத்திற்கு இசைந்தாற்போல தங்களின் படிப்த்தைகளைக் காட்டி உலகத்திலே பேருண்டாக்க வேணும் என்கிற நோக்கத்தினாலே அனேகங்கோடி பாடல்களை உண்டு பண்ணினார்கள். இந்த நீண்ட

காலத்திருந்த வித்துவாங்கி கிஷரெல்லாம் ஒவ்வொருத்தரும் நினைத்தபடி அனேக கதைகளையும் புராணங்களையும் உண்டு பண்ணின படியினாலே, உலகம் பொய்யான புத்தகங்களினாலும், சாஸ்திரங்களினாலும் நிறையப் பட்டுப்போச்சுது. இந்த தேசத்துப் பிள்ளைகள் சிறு வயது தொடங்கி அதுக்களை படிக்கிறபடியினாலே அந்தப் பொய்யிலே தானே வேரூன்றிப் போய் சத்தியத்தை ஏற்றுக் கொள் மாட்டோம். என்று அத்தோடு எதிர்த்து நிற்கிறார்கள்.

பிள்ளையுஞ் சமணாருடைய வேதத்துக்கு அடுத்த பெரியவர்கள் சொல்லுகிறது என்னவென்றால், ஸ்ரீரங்கம், திருவெண்ணைக்காவல் மற்றும் உண்டான பெரிய கோயில் ஸ்தலங்கள் எல்லாம் எங்களுடையது. இதைப் பிராமணர் வலோக்காரத்தினாலே அனுசாரி பண்ணிப் படித்துக் கட்டிக் கொண்டு எங்கள் கோயில்களை எல்லாம் தங்களின் கோயில்களாக்கிக் கொண்டார்கள். பெரிய கோயில்களெல்லாம் எங்களுடையது. அது அவர்களுடைய சொந்த மென்று மற்றவர்களுக்கு ஆதரவு கிடையாதென்று இப்படி பலமாய்ச் சொல்லுகிறார்கள்.

சமணர்களுடைய வேதத்தை ஒதுக்கி சிவவேதம், வைணவேதமே சிறந்தது என போற்றினர். அதோடு மட்டுமில்லாமல் இவ்விரண்டு வேதங்களும் ஆதிஞானமார்க்கமாய்ச் சொல்லப்படுகிறது என்று புத்திமான் கண்டு கொள்வதற்கு இடமுண்டு.

இந்த சமணர்களைப் பாண்டிய மன்னன் கொடுமைப்படுத்தியதால் பலர் இறந்துப் போனார்கள்

எஞ்சியவர் சிதறி ஓடினார்கள் அதோடு மட்டுமின்றி சமணர்களுக்கு வல்லமை இல்லாமல் போனது. சமணர்களையும், சைவர்களையும் ஆராய்ந்துப் பார்த்தால், சமணர்களின் வேதத்தையும், பழக்க வழக்கங்களையும், அலாதியாக எழுதி அப்படியே சிவ பக்தர்கள், வைணவ பக்தர்களுடைய அலாதியாக ஒப்பிட்டுப் பார்த்தால் சமணர்களுடைய நியாயமே அதிகத் திட்டமாய் இருக்கும். அனுக்களையெல்லாம் பின்னாலே கூடுமான சமயங்களினாலே எழுதிக் கட்ட மனதாய் இருக்கிறேன்.

பிள்ளையும் சாலிவாகன சகாப்தத்திலே சோழ ராசாக்கள் இருந்தார்களோ அதற்கு முன்னிருந்தார்களோ என்று விசாரித்த இடத்தில் கலியுகத்தில் ஆதி தொட்டு சோழ ராசாக்கள் இருந்தார்கள் என்று சொல்கிறார்கள். மற்றவர்கள் அப்படியில்லை. சகாப்த ஆண்டுக்குள்ளாகத் தானே சோழ ராசாங்கம் இருந்ததாகச் சொல்லுகிறார்கள் இதைத் தொட்டு நான் நினைப்பது என்னவென்றால், பிரதீசுவர மருத்துவம் அல்லது சோழ மருத்துவத்தில். சொல்லுகிறபடி சோழ ராசாங்கம் 1172 வருஷமாய் நிலைபெற்றது என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், இதற்கு சரியாய் ஏறக்குறைய முந்தின. சோழ சரித்திரமும் இதற்கு ஏற்றாற்போல இசைந்திருக்கிறது.

உலகத்தின் தண்டகத்தின் படியே 3000-4000 வருடங்களுக்கு முன் நடந்ததை அவ்வளவு தெளிவாகச் சொல்லியிருக்க மாட்டார்கள். சோழ ராசாக்கள் கட்டின கோயில்களுடைய பலன்களைக் கொண்டு வெகு நாளைக்கு முன்னர் கட்டினது என்றும், அக்கோயில்களை ஆய்வு

செய்ததில் இப்போது நாம் இருக்கிற சாதி வருஷம் 1810 வருஷத்துக்கும் அதற்கும் ஒத்துப் பார்த்தால் ஆயிரம் வருஷம் இருக்குமே ஒழிய அதிகமாய் இருந்திருக்க மாட்டாது என்று நினைக்க வேண்டி இருக்கிறது. ஆயினும், சோழ ராசாக்கள் சகாப்த ஆண்டுகளுக்குப் பிறகே தானே முற்றிலும் உண்டானார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது. சகாப்தத்திற்கு முன் ஆயிரம் வருடம், சகாப்தத்திற்கு பின் ஆயிரம் வருஷமும் ஆக இரண்டாயிரம் வருஷம் சோழனுக்கும் அவனக்குப் பின்னாக தோன்றிய வெள்ளிப் பாண்டியனும் ஆண்டிருக்க வேண்டும்.

அதிகத் தெளிவாய் பிராமணர்களை விசாரிப்பதற்கு போதுமான சோதிடசாஸ்திரிகள் அல்லது போதுமான ராச சரித்திரங்கள் அனைத்தும் அகப்படவில்லை.

அவைகளெல்லாம் அவதரித்த பிறகு இன்னும் அதிகதிட்டமாய் சோழ ராசாக்கள் அரசாட்சியை எழுதிக் காட்டுவேன் பின்னையும் அவ்விடத்தில் அரிய வேண்டியது என்னவென்றால், இந்த சோழ ராசாக்கள் மொத்தம் பேருரெடுப்பாய் பெரிய ராசாக்கள் என்று நினைக்கக் கூடாது ஒரு பெரிய பாளையப்பட்டு அல்லது ஒரு சின்ன ராசாவைப் போலிருந்தார்கள். இந்த சோழனுடைய ராஜ்சியம் எல்லாம் 24 காதங்களுக்குள் இருந்தது. 24 காதங்களுக்குள்ளான ராஜ்ஜியங்களை ஆளுகிறவனை பெரிய ராசா அல்லது சக்கரவர்த்தி என்று சொல்லக்கூடாது. இப்படியே பாண்டியனுக்கு 64 காதமும், சேரனுக்கு 81 காதமும் இருந்து. சோழனுடைய 24 காதத்திலே காண்கிற பணமே பாண்டியனுடைய 54

காதத்திலும், சேரனுடைய 81 காதத்திலும் கண்டது என்னவென்றால், பாண்டிய ராஜ்ஜியத்திலே ஆறுகள் பெறுமளவில் இல்லாத காரணத்தாலும், சேரனின் ஆட்சிப் பகுதி அதிக பரப்பானவை கொண்டுள்ளது.

சோழ ராஜ்ஜியத்திலே காடுகள், மலைகள் அதிகம் இல்லாத காரணத்தினால் குறுகிய பரப்பளவைக் கொண்டுள்ளது. இருந்தபோதிலும் சோழ ராசாக்கள் பல வருடங்கள் அரசாட்சிப் புரிந்ததற்கு காரணம் எதிரிகளின் தாக்குதல் அதிகம் இல்லாததே ஆகும். அந்த பூமியிலே காணுகிற பணங்களுக்கு வேறு செலவு இல்லாததினாலும், தங்கள் நாமம் பூமியிலே பிரஸ்தாப மாகிறதற்கு வேண்டி அனேக கோயில்களையும், குளங்களையும் தோற்றுவித்தாலும், வித்து வாங்கிஷருக்கும், பிராமணருக்கும் வேண்டிய தர்மங்களை செய்ததினாலும் மிகுந்த பேரெடுத்தார்கள் காலப் போக்கில் சோழ ராஜ்ஜியம் அற்றுப் போன பிறகு இந்த இரண்டு ராஜ்ஜியத்தையும் பாண்டியர்கள் ஆட்சிப் புரிந்தார்கள். சோழனைக் காட்டிலும் பாண்டிய மன்னர்கள்பெரும் செல்வாக்குப் பெற்று அரசாட்சிப் புரிந்தனர்.

400 வருஷங்களுக்கு முன்பு பாண்டியர்களை அடுத்து விஜய நகர மன்னர்கள் சோழ ராஜ்ஜியத்தை ஆண்டார்கள். விஜய நகர மன்னர்களுடன் கிருஷ்ணதேவராயன் புகழ் பெற்றவன். கிருஷ்ணதேவராயனின் கீழ் ஒன்பது மன்னர்கள் அரசு புரிந்தனர். சேர, சோழ பாண்டிய மன்னர்களை விட வலசை ராயர்கள் பெரியவர்கள் என்று சொல்ல வேண்டும்.

இவர்களைத் தொட்டு உலகச் சரித்திரம் 298 ஏட்டிலே என்ன எழுதியிருக்கிறது என்றால்,

விஜய நகர மன்னர்களுள் கிருஷ்ணதேவராயனின் குமாரன் இராமதேவராயர் மரணம் அடைந்த பிறகு இஸ்லாமியர்களான நவாபுகள் அவனுடைய ராஜ்ஜியத்தை கைப்பற்றிக் கொண்டனர். நவாபுகளுள் ஒருவன் கோல் கொண்டா சோழ ராஜ்ஜியத்தை கோல் கொண்டா அரசாட்சியில் புரிந்தான். 1689 களில் அவுரங்கசீப் கோல் கொண்டாவிட மிருந்து சோழ ராஜ்ஜியத்தை மீண்டும் தன் வசம் வைத்துக் கொண்டான் என்று உலகச் சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே சோழ ராசாக்களின் தலைமுறை அட்ட வணைகளைச் சற்று நிறுத்தி கிராயர்கள் ஆண்டதையும், அதன் பிறகு வடுக நாயக்க மன்னர் ஆண்டதையும் அறிய முடிகிறது. இறுதியாக மராட்டியர்கள் ஆண்டதையும் அவர்களின் தலைமுறைகளையும் ஆட்சி சிறப்பையும் இவ்விடத்தில் எழுதி காட்டுகிறேன்.

சோழ ராசாங்கத்துக்குப் பின்னாக பூர்வீகத்திலே தெட்சண உத்திராதி இராட்சிய பரிபாலனம் பண்ணின இராயகர்கள் பெயர் அட்டவணை.

புசாங்கராயர், அச்சுத தேவராயர் என்று பேர் கொண்ட மல்லிகா தேவராயர் வீர சிங்காதராயர், கோனேரி தேவராயர், என்மதிம்மராயர், ஆனைக் கொந்திராயர், அசுபதி கெசபதி ராயர், நாயதி ராயர், வாசுதேவராயர், நரசிங்கராயர், இராமதேவராயர், இஸ்திரி ரெங்கராயர்,

ரெங்கதேவராயர் அனுமந்த ராயர், கிருஷ்ணதேவராயர் வீர வசந்தராயர். ஆகிய பதினாலு பேர்கள், இந்த சோழ ராஜ்ஜியத்தை ஆண்டார்கள். ஏறக்குறைய 400 ஆண்டுகள் சோழ ராஜ்ஜியத்தை ஆண்டனர் என சொல்லியுள்ளனர்.

உலகச் சரித்திரம் 197 ஆம் பக்கத்திலே இருக்கிற தென்னவென்றால் வலசைராயக்கன் வங்கிஷம் பிரபுடைய வேதர் முதல் கிருஷ்ணதேவராயர்முடிய 12 தலைமுறை வரைக்கும் ஏறக்குறைய 1000 ஆண்டுகள் சோழ ராஜ்ஜியத்தை ஆண்டுள்ளனர்.

இப்படியாக இவர்கள் 1618 வரைக்கும் ஆண்டார்கள் என்று உலக சரித்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் ராசாக்களின் துவக்க கால அரசாட்சி நிலையை தெளிவாக காணப்படவில்லை ஆயினும் ஏறக்குறைய 1000 வருஷங்கள் சோழ ராஜ்ஜியத்தை ஆண்டுள்ளனர். மேலும் 400 வருஷங்கள் ஆண்டுள்ளனர் என மேலோட்டமாய் கூறுவதற்கும் வழியுள்ளது. மேலும் சற்றேறக்குறைய சரியாக இருக்கும். இந்த ராசாக்கள் 12 அல்லது 13 பட்டங்கள் வரை சோழ ராஜ்ஜியத்திலே அரசாட்சி புரிந்துள்ளனர்.

இந்த ராயர்களுடைய போர்களைத் தொட்டு விசாரித்து முன்னது பின்னது வராமல் ஒழுங்குபடுத்த வேணும். இந்த ராயர்காலத்திலே அப்பாசி என்கிற ஒரு பெரிய மந்திரி இருந்தார். அவர் மகா வீரமுள்ள, பொருளாதாரத்தில் வல்லவராக திகழ்ந்தார். அவருக்கும் ராயருக்கும் உண்டான காரியங்களைத் தொட்டு சில புத்தியுள்ள கதைகளும் உண்டு. அவைகள் அங்கங்கே உள்ள உலகத்திலே இன்னமும் சொல்லப்படுகிறது.

துரை அவர்களுக்கு அதின் பேரில் மனது உண்டாயிருந்தால் அவைகளைத் திரட்டிச் சேர்ந்து எழுதி அனுப்புகிறேன்.

இராயர் காலத்திற்குப் பிறகு தஞ்சை நகரத்தை கர்நாடக நாயக்கமார்கள் என்று அழைக்கப்படுகின்ற அச்சுதப்பநாயக்கர் விஜயராகவ நாயக்கர், செவ்வப்ப நாயக்கர் என்பவர்கள் ஆண்டார்கள் என்று சொல்கிறார்கள். இதைத் தொட்டு உலகச் சரித்திரத்திலே 197 ஆம் ஏட்டிலே கூறப்பட்டுள்ள செய்தி என்னவென்றால் விஜய நகரம் ஆண்டு கிருஷ்ணப்ப நாயக்கர் நாளிலே செங்கமாலேழுக் குடியாவன் குறகண செவ்வப்பநாய கன்னராய்யண்டப்ப காரனாலேயும், ராசாத்தியாலேயும் வளர்க்கப்பட்டு வளர்ந்தவனாவான். இவனுக்கு ராயர் தஞ்சாவூர் ராஜ்யத்தைக் கொடுத்தார். முதல் முதல் செவ்வப்ப நாயக்கர் ஆண்ட பிறகு அவரின் தம்பி அச்சுதப்ப நாயக்கர் தஞ்சைப் பகுதிகளை ஆண்டார். அச்சுதப்ப நாயக்கர்களுக்குப் பிறகு அவரது மகன் இரகுநாதநாயக்கர் ஆண்டார். அதன் பிறகு இராம பத்திர நாயக்கர் ஆறு மாதமும், விஜய ரகுநாத நாயக்கர் முப்பத்தாறு வருடங்களும் ஆண்டு அனுபவித்துக் கொண்டு வந்தார்கள். அத்தோடு வடுகா அரசாங்கம் முகிழ்ந்தும் போச்சுது. இவ்விதமாக சோழ ராஜ்ஜியத்தை நாயக்கர்கள் ஆண்டதோடு மட்டுமின்றி வடுகார ராசாக்கள் மூன்று தலைமுறையாக 58 வருடங்கள் சோழரின் பகுதிகளை ஆண்டுள்ளனர் என்று சொல்லியிருக்குது.

விஜய ரகுநாத நாயக்கருக்கப் பிறகு அவரின் மகன் செங்கமலதாசு மூன்று மாதங்கள் மட்டும் ஆட்சிப் பொறுப்பில் இருந்தான். அதன் பிறகு 1675 ஆம் ஆண்டு தொடக்கத்தில் புதிய இராசாக்களாக மராட்டியர்கள் நுழைந்து சோழ ராஜ்ஜியத்தை ஆண்டு, வருகின்றனர் அதற்கு விபரம் எப்படியெனில், மராட்டியனாகிற எகோசி ராசா இராட்சத வருஷம் தைமாதம் சத்தமியில் சினேகத்தின் பேரில் தஞ்சாவூர் கோட்டைக்கு உள்ளே வந்து கோட்டையைக் கைபற்றிக் கொண்டுதஞ்சையை ஆண்டார்.

ஏகோசி புத்திரன் சக்கிர ராசாதுந்துமி முதல் விகுதிறுதி மட்டும் இருபத்தொன்பது வருடம் ஆணடார். அப்பால் சரபோஜி மகாராஜா ககா வருஷம் முதல் சவுமிய வருஷம் வரைக்கும் பதினெட்டு வருடம் ஆண்டார். அவரின் தம்பி துரை ராசா மகாராச தருண வருடம் முதல் ஆனந்த வருடம் வரைக்கும் ஆண்டார்.

துக்கேசி புத்திரன் ஏகோசி இராசா இராட்சத வருஷம் மட்டும் பதினொரு மாதம் ஆண்டார். ஏகோசி ராசாவின் பட்ட இஸ்த்திரி பட்டங்களைக் கட்டிக் கொண்டு இருபத்தி மூன்று மாதம் ஆண்டார்கள்.

சரபோஜி ராசாவின் மகன் காட்டுராசா குறிப்பிட்ட காலம் தஞ்சையை ஆண்டுள்ளதை அறிய முடிகிறது. அவர் தஞ்சையை பதினொரு மாதம் மட்டுமே ஆண்டுள்ளார். அதன் பிறகு துளசி மகாராசாவின் பின்னனி பிரதாப்சிங் மகாராசா மார்கழி மாதம் வரைக்கும் ஆறு மாதங்கள் ஆண்டுள்ளார்.

பிரதாப்சிங்கின் புத்திரன் துளசி மகாராசா சுபானு வருடம் மார்கழி மாதம் முதல் பிரபவ வருடம் மாசி மாதம் வரைக்கும் 23 வருடங்களும் 2 மாதமும் ஆண்டுள்ளார். இவரது தம்பி அமிர்தசிங் மகாராசா பிலவங்க வருடம் முதல் காலையுத்தி வருடம் ஆணி மாதம் வரைக்கும். 11 வருடம் நாலு மாதம் ஆண்டார் இவர்களுக்குப் பிறகு துளசி மகாராசாவின் தத்துப்பிள்ளையான சரபோஜி மகாராஜா பட்டம் ஏற்று தஞ்சைப் பகுதியை ஆட்சிப் புரிகிறார். இப்படியாக இராயரின் ஆட்சி முறை தொடங்கியது முதல் இது வரைக்கும் உத்தேசமாக 400 வருடங்கள் அதற்கு மேலாக ஆண்டுள்ளனர். 29 பட்டங்களைப் பெற்று இராயரின் ஆட்சி சோழ ராஜ்ஜியத்திலே கோலோச் சியுள்ளதை அறிய முடிகிறது.

❖❖❖❖❖❖❖❖

பின்னிணைப்பு

முனைவர் சு. சௌந்தரபாண்டியன் அவர்களின் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

சோழ மண்டல வரலாறுகள் - காலவாரியாக

பொதுவாக முற்கால, பிற்காலச் சோழர்கள் குறித்த வரலாற்றுச் செய்திகளைக் காலமுறைப்படி வருமாறு குறிக்கலாம்.

கி.மு. 100 ஐ ஒட்டிய காலம் : 1. வால்மீகி இராமாயணத்தில் சுக்கிரீவன், புண்டரசோழ, பாண்டிய, கேரள தேசங்களில் சீதையைத் தேடுமாறு

குரங்கினங்களுக்கு கூறுகிறார். (கிட்கிந்தா காண்டம்)

2. பாரதப் போரில் தருமனின் படைக்குச் சோழ அரசன் தருமன் உதவினான்

கி.மு.3-ஆம் நூற்றாண்டு : அசோகர் கல்வெட்டில் (Rock Edicts II&III) 'சோழர் பாண்டியர் கேரளபுத்திரர்கள், தென்னாட்டை ஆண்டு வந்ததாகக் குறிப்பிட்டுள்ளது.

கி.மு. 2-ஆம் நூற்றாண்டு : கிரேக்க, உரோம நாடுகளுக்கும் சோழநாட்டுக்கும் வாணிகத் தொடர்புகள் இருந்ததாகச் சான்றுகள் உள்ளன.

கி.மு. 2-ஆம் நூற்றாண்டு : கிரேக்க, உரோம நாடுகளுக்கும் சோழநாட்டுக்கும் வாணிகத் தொடர்புகள் இருந்ததாகச் சான்றுகள் உள.

கி.மு.2 : அ) இக்காலக்கடத்தில் சங்க காலச் சோழர்கள் ஆண்டனர். அவர்கள்:-

1. காந்தமன்
2. தூங்கையில் எறிந்த தொடித்தோட் செம்பியன்
3. உருவப் பஃதேர் இளஞ்சேட் சென்னி
4. கரிகாலன்
5. குளமுற்றத்துச்சஞ்சிய கிள்ளி வளவன்

6. நலங்கிள்ளி

7. மாவளத்தான்

8. போர்வைக் கோப்
பெருநற்கிள்ளி

9. வேற்பஃறடக்கைப்
பெருவிறற்கிள்ளி

10.நெடுங்கிள்ளி

11. இராசசூயம் வேட்ட
பெருநற்கிள்ளி

12. செங்கணான்

13. இலவந்திகைப்பள்ளித்
துஞ்சிய நலங்கிள்ளி
சேட்சென்னி

14. குராப்பள்ளி துஞ்சிய கிள்ளி
வளவன்

15. சூராப்பள்ளி துஞ்சிய
பெருந்திருமாவளவன்

16. செருப்பாழியெறிந்த
இளஞ்சேட்சென்னி

17. நல்லுருத்திரன்

18. நெய்தலங்கானல்
இளஞ்சேட் சென்னி

19. முடித்தலைக் கோப்பெரு
நற்கிள்ளி

20. நல்லடி

2) பட்டினப்பாலை மூலம்,

	சிறந்த வாணிகத்தலமாக இக்காலக்கட்டத்தில் பூம்புகார் விளங்கியதாக அறிகிறோம்.
கி.பி.80	: பிளினி குறிப்பால் பூம்புகாரிலிருந்து ஏற்றுமதி வாணிகம் நடைபெற்ற குறிப்பைப் பெறுகிறோம்.
கி.பி.140	: தாலமி குறிப்பால், பூம்புகார். நாகப்பட்டினம் இரண்டும் துறைமுகங்களாக அந்நாளில் இருந்தன என்பது புலனாகிறது.
கி.பி.6-ம் நூற்றாண்டு	: பல்லவர்கள், சோழ நாட்டை வென்று தம் ஆதிக்கத்தைச் செலுத்தினர். மகாவம்சம் எனும் நூலில் சோழ அரசர்கள் பற்றிய குறிப்புகள் உள.
கி.பி. 7-ஆம் நூற்றாண்டு	: அப்பர். சம்பந்தர் ஆகியோர் பல சோழ நாட்டுச் சிவத்தலங்களைப் பாடினர்.
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு	: காவிரிநதிக்கரையில் மண்டங்குடியில்

		தொண்டரடிப்பொடி ஆழ்வார் பிறந்தார்.
		உறையூரில் திருப்பாணாழ்வார் பிறந்தார்.
		திருக்குறையலூரில் திருமங்கையாழ்வார் பிறந்தார்.
		இக்காலக்கட்டத்தில் வடிக்கப் பட்ட 'ஜேஷ்டாதேவி' சிற்பம் தஞ்சையில் கண்டுடிக் கப்பட்டுள்ளது.
கி.பி. 9-ம் நூற்றாண்டு	:	விசயாலயச்சோழன் மீண்டும் பிற்காலச் சோழர் மரபைத் தொடங்கினார். முத்தரையர்களை வென்று இதனைத் தொடங்குகிறார்.
கி.பி. 880 இல்	:	வரகுண பாண்டியன் சோழநாட்டின் மீது படையெடுத்தார். திரும்பவும் பயத்தில் (கும்பகோணம் அருகே) தோற்றார்.
		சோமாசிமாற நாயனார் சிலப்பணிகள் செய்தார்.

கி.பி.900	:	திருத்தக்கதேவர் இக்காலத்தைச் சேர்ந்தவர் இவர் சோழக் குலத்தவர்.
கி.பி.10-ஆம் நூற்றாண்டு	:	ஆதித்தசோழன் (881-907) கொங்குநாட்டை வென்றான்.
கி. 949	:	இராட்ரகூட மன்னன் மூன்றாம் கிருட்டினன் சோழநாட்டின் மீது படையெடுத்தான். சோழநாட்டின் வடபகுதி கிருட்டினன் வசமாகியது.
கி.பி. 953 -973	:	கண்டராதித்த சோழன் ஆட்சி
கி.பி. 973	:	உத்தம சோழன் ஆட்சி
கி.பி.985	:	உத்தமசோழன் இறந்தான் இராசராசன் முடிசூடினான் காந்தளூர், விழிமந்தை வென்று சேரநாட்டைப் பிளந்தார். இலங்கை மீது படையெடுத்து வென்றார். மைசூர் நாட்டில் கங்கபாடி.. நுளம்பாடி, தடிகைபாடி ஆகிய பகுதிகளை வென்றார். தெலுங்குச் சோழரையும் வென்றார்.
கி.பி.10 ஆம் நூற்றாண்டு	:	இக்காலகட்டத்தே வரையப்பட்ட ஓவியங்கள் தஞ்சை பிருகதீசுவரர் கோயிலில் உள.
கி.பி.1014	:	முதலாம் இராசராசன் இறந்தார்.
கி.பி. 1014-1044	:	முதலாம் இராசேந்திரன் ஆட்சி, வடநாட்டு மீது படையெடுத்து

		வெற்றி பெற்றான். கடாரத்தை வென்றான்.
கி.பி.1044 -1054	:	முதலாம் இராந்திரன் ஆட்சி
கி.பி. 1054-1063	:	இரண்டாம் இராசேந்திரன் ஆட்சி
கி.பி. 1063 - 1070	:	வீரராசேந்திரன் ஆட்சி
கி.பி. 1070	:	முதலாம் குலோத்துங்கன் ஆட்சி, கலிங்கத்துப்பரணி இவனது வெற்றியையே பாடுகிறது.
கி.பி. 11 ஆம் நூற்றாண்டு	:	திருச்சி அருகே உள்ள துவாக்குடி பெரிய ஏரியில், நீர்ப்பாய்ச்சல் தொடர்பான குமிழி இக்காலத்தைச் சேர்ந்தது.
கி.பி.1118	:	விக்கிரம சோழன் ஆட்சி. ஒட்டக்கூத்தர் இவரது அவைப்புலவர்.
கி.பி.1130-115	:	இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சி
கி.பி. 1150-1163	:	இரண்டாம் இராசராசன் ஆட்சி
கி.பி. 1163-1178	:	இரண்டாம் இராசாதிராசன் ஆட்சி
கி.பி.1178	:	மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சி
கி.பி. 1218-1256	:	மூன்றாம் இராசராசன் ஆட்சி, பாண்டியர் சோழநாட்டைச் சூறையாடினார்.
கி.பி. 1246-1279	:	மூன்றாம் இராசேந்திர சோழன் ஆட்சி

கி.பி. 1257	:	சுந்தரபாண்டியன் சோழநாட்டின் மீது படையெடுத்து வென்றான். இராசேந்திர சோழனைத் தமக்குக் கப்பம் கட்டுமாறு செய்தான்.
கி.பி.1279	:	இராசேந்திரசோழன் இறந்தான். சோழர் ஆட்சி முடிவுற்றது.
கி.பி. 13 ஆம் நூற்றாண்டு	:	சீனாவிற்கும் சோழ நாட்டிற்கும் இக்காலத்தில் நடந்த வாணிபத்திற்குச் சதுரத்துளையுடைய வட்டமான காசுகள் சான்று; தரங்கம்பாடியில் இக்காசுகள் கிடைத்தன.
கி.பி.14 ஆம் நூற்றாண்டு	:	ஆதினங்கள் எனும் சைவ மடங்கள் முதன் முதலாகத் தோன்றின.
கி.பி. 1534-1662	:	தஞ்சாவூரில் விசயநகர, அரசர்களின் ஆட்சி.
கி.பி.1537 -1543	:	மதுரைச் செவ்விந்தியப்ப நாயக்கர், திருவாடுதுறை ஆதீனத்திற்கு, எட்டு மடங்களை அமைத்துப் பெரும் சொத்து ஏற்படுத்தித் தந்தார்.
கி.பி. 1540 - 1580	:	சேவப்பநாயக்கர், தஞ்சையில் நாயக்கராட்சியை ஏற்படுத்தினார்.

கி.பி. 1580 -1600	:	தஞ்சையில் அச்சுதப்ப நாயக்கன் ஆட்சி
கி.பி.1600-1634	:	தஞ்சையில் இரகுவாத நாயக்கன் ஆட்சி
கி.பி. 1620	:	தரங்கம்பாடியில் டேனிஷ்காரர்கள் ஒரு கோட்டையை கட்டினர்.
கி.பி.1634 -1673	:	தஞ்சையில் விஜயராகவ நாயக்கர் ஆட்சி
கி.பி. 1673	:	மதுரை நாயக்கராகிய சொக்கநாத நாயக்கர், தஞ்சை மீது படையெடுத்தார். போரில் தஞ்சை விஜயராகவ நாயக்கர் இறந்தார்.
கி.பி. 1674	:	பிஜப்பூர் சுல்தானின் ஆளுநரிடமிருந்து மார்ட்டின் (Martin) புதுச்சேரியில் வியாபாரம் செய்து கொள்ள உரிமை பெற்றார். பிரஞ்சு ஆதிக்கம் ஆரம்பமானது.
கி.பி.1675	:	வெங்காஜி என்ற ஏகோஜி தஞ்சையில் மராட்டிய வமிசத்தைத் தொடங்கினார்.

கி.பி. 1977	:	சிவாஜி, தென்னிந்தியா மீது படையெடுத்தார் வெங்காஜி சிவாஜிக்குக் கப்பங்கட்டுபவராக ஆனார்.
கி.பி. 1680	:	சிவாஜி இறந்தார்.
கி.பி. 1685	:	வெங்காஜி இறந்தார்
கி.பி. 1685-1712	:	இரண்டாம் ஷாஜிஹின் ஆட்சி, தஞ்சையில்
கி.பி. 1686	:	புதுக்கோட்டையில் தொண்டைமான்களின் ஆட்சி தொடங்கிற்று.
கி.பி. 1693	:	சுல்பிகார்கான் இரண்டாம் ஷாஜியைத் தோற்கடித்தார். இரண்டாம் ஷாஜி. ஔரங்கசீப்புக்குக் கப்பம் கட்டும் சிற்றரசராக ஆனார்.
கி.பி. 1712-1728	:	தஞ்சையில் சரபோஜி ஆட்சி.
கி.பி.1713	:	தரங்கம்பாடியில், லூதரன் மிஷன் அச்சகம் நிறுவப்பட்டது.
கி.பி. 1722-1723	:	அம்மை நோயால் புதுக்கோட்டையில் பலர் மாண்டனர்.
கி.பி. 1728-1736	:	துக்கோஜி ஆட்சி, தஞ்சையில்

கி.பி. 1736-1739	:	பிரஞ்சுக்காரர்கள் காரைக்காலைப் பிடித்தனர்.
கி.பி. 1739	:	போன்ஸ்லே தலைமையில் மராட்டியர் படை தமிழகம் மீது படையெடுத்தது.
கி.பி. 1739-1763	:	பிரதாபசிங்கு தஞ்சை அரசரனார்.
கி.பி. 1741 கவர்னராக	:	டியூப்ளே பிரஞ்சுக் வந்தார்.திருச்சியை மராட்டியர் படை முற்றுகையிட்டது
கி.பி.1744	:	அன்வருதீன் தஞ்சை மீது இரண்டாம் முறையாகப் படையெடுத்தார்.
கி.பி. 1745	:	அன்வருதீன் தஞ்சை மீது இரண்டாம் முறையாகப் படையெடுத்தார்.
கி.பி. 1752	:	முகமதலிக்குஉதவியாக மேஜர் லாரன்ஸ், கேப்டன் கிளைவ் தலைமையில் ஆங்யீகலப்படை திருச்சி வந்தது. சந்தாசாகியின் திருச்சிக்கோட்டை முற்றுகை தளர்ந்தது.

கி.பி.1753	:	மைசூர்ப்படை, பிரஞ்சு உதவியுடன் திருச்சிக்கோட்டையை முற்றுகையிட்டது.
கி.பி.1758	:	லாலி (பிரெஞ்சகவர்னர்) தஞ்சையைத் தாக்கினார் தோற்றார்.
கி.பி. 1763	:	பிரதாப்சிங்கு இறந்தார்.
கி.பி. 1763-1787	:	துளஜாஜி பட்டத்துக்கு வந்தார். இராமநாதபுரம் மற்றும் சிவகங்கையைத் தாக்கினார்.
கி.பி.1769	:	ஹைதர் அலி, தஞ்சை திருச்சி ஆகிய ஊர்களின் படையெடுத்தான்.
கி.பி. 1771	:	தஞ்சை அரசன் துளஜாஜி இராமநாதபுரத்தின் மீது படையெடுத்தான்.
கி.பி.1773	:	நவாப் முகமதலி, ஆங்கிலேயர் மற்றும் தொண்டைமான் உதவியுடன் தஞ்சைக் கோட்டையைப் பிடித்தான் இதனால், பட்டுக்கோட்டையின் ஒரு பகுதி இராயரகுநாத தொண்டைமானுக்கு அளிக்கப்பட்டது.
கி.பி. 1780	:	ஹைதர் அலி, தஞ்சையைத் தாக்கிக் கொள்ளையிட்டான்.
கி.பி. 1781	:	தொண்டைமான், கீழானிலை, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி

		ஆகியவற்றைக் கைப்பற்றி கொண்டார்.
கி.பி.1782	:	திப்புசல்தானின் படையும் பிரெஞ்சுப்படையும் சேர்ந்து நாகப்பட்டினம், மன்னார்குடி ஆகிய ஊர்களைத் தாக்கின.
கி.பி.1783	:	திருமருகல் எனும் ஊரில் நாணயம் தயாரிக்கும் தொழிற்சாலை செயல்பட்டு வந்தது.
கி.பி. 1789	:	தஞ்யில், ஆங்கிலேயர், அமர்சிங்கிற்கு ஓய்வுச் சம்பளம் கொடுத்து சரபோஜியை அரசராக்கினார். தொடர்ந்து, ஆண்டுதோறும் ஒரு இலட்சம் வராகனைப் பெற்றுக் கொள்வது, பதிலாகத் தஞ்சை ஆட்சியை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிடுவது என்ற ஒப்பந்தம் சரபோஜிக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே ஏற்பட்டது.
கி.பி.1807	:	சரபோஜியின் அச்சகம் நிறுவப்பட்டது.
கி.பி.1814	:	காம்பக்குடியில், விசயரகுநாதத் தொண்டைமானால் ஒரு சாயத் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.
கி.பி.1833	:	சரபோஜி இறந்தார்.
கி.பி. 1833-1855	:	சரபோஜியின் மகன் சிவாஜி

		தஞ்சை அரண்மனையில் அரசராக இருந்தார்.
கி.பி.1845	:	தரங்கம்பாடிக் கோட்டை ஆங்கிலேயர் வசமாயிற்று.
கி.பி. 1855	:	தஞ்சை அரசர் சிவாஜி இறந்தார். இதனைத் தொடர்ந்து, தஞ்சை அரசு முழுவதும் ஆங்கிலேயர் வசமானது; மராட்டியர் வம்சம் முடிவுற்றது. தஞ்சையில் ஆங்கில ஆட்சி தொடங்கியது.
கி.பி. 19 ஆம் நூற்றாண்டு	:	1. மன்னார்குடி 2. கும்பகோணம் 3. பந்த நல்லூர் 4. திருக்காட்டுப்பள்ளி 5. திருவாரூர் ஆகிய ஊர்களில் காகிதப்பட்டறைகள் இருந்தன.

இவ்வாறு நீண்ட நெடிய வரலாறுகளைத் தன்னகத்தே கொண்டதாக சோழ மண்டலம் திகழ்கிறது.

✧✧✧✧✧✧✧✧